www.tamilarangam.net

# தமிழீழ விடுதலைப் புலிகள்
# LIBERATION TIGERS OF THAMIL EALAM

5-12-83

## அஞ்சலில் வந்தவை போலியானவையே

27-11-83 எனத் திகதியிடப்பட்ட தட்டச்சுப் பிரசுரமொன்று எமது இலட்சனையுடன் எமது இயக்கப் பெயரில் பலருக்கும் அஞ்சல்மூலம் சேர்ப்பிக்கப்பட்டுள்ளது. எமது போராட்ட வேகத்தைத் தடுத்து நிறுத்த முடியாது தோல்வியின் விளிம்பில் நிற்கும் சிறிலங்கா அரச உளவுப்படையின் சிண்டு முடியும் செயலென்பதை அப் பிரசுரத்தை வாசித்த அனைவரும் நன்கறிவார்கள்.

இதுபோன்ற ஒரு செயலை ஏற்கனவே யாழ்நகரின் இரு பத்திரிகைக் காரியாலய முன்றலிலும் ஒரு இயக்க செயலகத்தின் முன்பும் பார்சல் குண்டுகளை எமது பெயரில் வைத்து எமக்கு அபகீர்த்தியை உருவாக்க முனைந்து தோல்வியுற்ற இவர்கள் இன்று இதுபோன்ற செயல்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதுபோன்ற போலிகளை மக்கள் இனங்கண்டு நிராகரித்து எம்மோடு ஒத்துழைத்து செயல்படுவார்கள் என்பது உறுதி. 27-11-83ல் எம்மால் சத்தியநாதனுக்கான நினைவஞ்சலிப் பிரசுரம் மட்டுமே வெளியிடப்பட்டது.

வெல்க தமிழீழம்!

புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்!

வே. பிரபாகரன்
தலைவர்
தமிழீழ விடுதலைப் புலிகள்

அரசியற்குழு
தமிழீழ விடுதலைப் புலிகள்

வெளியீடு-பிரச்சாரத் வெளியீட்டு வாரியம், தமிழீழ விடுதலைப் புலிகள்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்